# சந்தேக நிவாரணி

## ப்ரச்னோத்தர வாஹினி

மூலம்

பகவான் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சத்திய சாய் பாபா

தமிழாக்கம்

**என்.கஸ்தூரி,** எம்.ஏ.பி.எல்

## 4. சித்தும் சத்யமும்

**சுவாமி :** ஓ ! வந்துவிட்டாயா? வருவாயோ இல்லையோ என்று உன்னை நீண்ட நேரமாக எதிர்பார்த்துக்கொண்டிருந்தேன். நீ காலந்தாழ்த்தி வருவனல்ல என்று எனக்குத் தெரியும். உன்னுடைய வருகை எனக்கு எவ்வளவு இன்பம் அளிக்கிறது, தெரியுமா?

**பக்தன் :** வேறு எதையேனும் நான் பொருட்படுத்தாது இருக்கலாம். ஆனால் தங்களது கட்டளையில் அவ்வாறு பாராமுகமாய் இருக்க முடியுமா சுவாமி ! உண்மை கூறின், ஒவ்வொரு திங்களிலும் பதினாறாந்தேதி என்று வரும்? எப்பொழுது தங்களைக் காண்பேன்? என்று ஆவலுடன் எதிர் பார்த்துக்கொண்டிருந்தேன். இதனைக் காட்டிலும் அதிக இன்பம் பயப்பது வேறுமுளதோ? இதனைக் காட்டிலும் நல்ல ஆகாரமும் நான் கிடைக்கப் பெறுவேனோ?

**சுவாமி :** மிகவும் நன்று. அத்தகைய முயற்சியும், பக்தியும் ஒருவன் நன்னெறிக்குப் பெருந்துணை புரிகின்றன. தோன்றுங் காலத்திலேயே அழியும் இயல்புடைய இப்பயனற்ற உலக இன்பங்களை நுகரவேண்டிக் கொள்ளும் உணவையும், உறக்கத்தையும் இழப்பதனால் தீமையொன்றுமில்லை. அந்த மெய்ஞ்ஞானத்தையும் அதனின் நன்முடிவையும் அறிவதால், ஆஹா ! என்ன பேரின்பம் உண்டாகின்றது. அதனை ஒரு புறம் விடுக. இப்பொழுது நீ விரும்புவது யாது? அதனை முதலில் கூறு, கேட்போம்.

**பக்தன் :** சுவாமி ! சென்ற திங்களில் தாங்கள் "சித்து" என்பது பற்றி ஏதோ கூறினீர்கள். தாங்கள் என்மீது கருணை கூர்ந்து அதனை விளக்கி அருளின், மிக்க மகிழ்ச்சி கொள்வேன். அதனை அறியும் ஆவலில், ஒவ்வொரு

நாளையும் ஒரு யுகமாகக் காலங்கழித்து வந்தேன். முடிவில் அதனை அறிய வேண்டிய இந்நாளும் வரப் பெற்றேன். அன்புகொண்டு விளக்கி அருளுங்கள், சுவாமி.

**சுவாமி :** இதுவரை நான் கூறியதை விளக்கமுறக் கொண்டனையா? அறிவது என்றால் நெட்டுரு செய்தல் என்பதல்ல. இவ்வுலகத்தின் உண்மையான இயல்பு நிலையற்றது என்பதை எண்ணத்தாலும், சொல்லாலும், செயலாலும் நன்கு உணர வேண்டும். மேலும் அதனைச் சாதகத்திலும் கொள்ள வேண்டும். நீ அவ்வாறு செய்கின்றனையா ?

**பக்தன் :** இதனைச் செய்ய வேண்டும், அதனைச் செய்ய வேண்டும் என்று இவ்வுலக விவகாரங்களிலேயே என்ணத்தை வீணாக்கக் கூடாது. இறைவன் சாயியின் பக்திச் சிந்தனையில் ஆழ்ந்துவிடவேண்டும் என்பதல்லவா தாங்கள் நினைப்பது? நான் அதனை அந்த அளவும் கூட அறியவில்லையானால், இவ்வுலகத் தீமைக்கு அடிமையாகிப் பொன்னான நேரத்தை மண்ணாக்கி விட்டேன் என்பதன்றோ பொருள். எனினும் அதனை நான் சிறிதளவு அறிந்துள்ளேன் என்றால் அது தங்களது கருணையினால் அன்றோ? என்னால் ஆவதும் ஒன்று உளதோ ?

**சுவாமி :** நன்று மகனே நன்று. விதைக்கப்பட்ட விதைகள் முளைவிட்டு, கதிர்விட்டு நல்லதோர் அறுவடை தருமாறு வளரா விட்டால், அந்த உழவன் எவ்வளவு மன வேதனை அடைவான் ! அவ்வாறே, நான் விதைத்த ஞான விதைகள் செழிப்புடன் நாற்றுவிட்டு, நல்லதோர் அறுவடை தருமாறு வளராவிட்டால் நானும் அவனைப் போன்று துன்பப்படுவேன். ஆனால் அவை செழிப்பாக வளர்ந்து, ஆனந்தமாம் அறுவடைக்குக் கனிந்து விட்டால் நான் எவ்வளவு ஆனந்தப்படுவேன் ! எண்ணிப் பார் மகனே, அதுதான் நான் விரும்பும் உணவு. இந்தச் சேவையைத் தான் நான் உன்னிடம் எதிர்பார்க்கிறேன். எனக்கு இதனைக் காட்டிலும் உயர்ந்தது வேறொன்று இல்லை. உண்மையும் பயனும் பொதிந்த இந்த நற்சொல்லை வீணாக்காது கையாண்டு இன்பத்தைப் பெற்று, அதனை நீ எனக்கு

ஆகாரமாகக் கொடுத்தால் நீ எதனை எத்தனை முறை கேட்டாலும் ஆனந்தமாகக் கூறு வேன். சொன்னவற்றை எல்லாம் கையாளாது, வீண் செய்து விட்டு மேலும் மேலும் சொல்லுங்கள், சொல்லுங்கள் என்று மக்கள் என்னை வற்புறுத்துகின்றனரே! நான் எப்படிச் சொல்வது? உன்னைப் போல் ஏனையோரும் சாதனை செய்ய முனைந்து விட்டால், இவ்வுலகில் துன்பத்தின் சாயலைக்கூடக் காண முடியாதே; உண்மை அல்லாததன் தோற்றமும் இருக்காதே.

**பக்தன் :** சுவாமி ! ஒவ்வொரு சிறு செயலை ஆற்றவும் இறைவனது அருள் தேவைப்படுகிறது. அவ்வாறு இருக்க இந்த வேதவழிகளைப் பின்பற்ற அவனது அருளின்றி முடியுமா? "அவன"ன்றி ஓரணுவும் அசையுமா? தாங்கள் கூறியதே போன்று, அவனது அருள் காத்துக் கிடக்கிறது. ஞாயுறைக் காணாவாறு மூடுபனி எவ்வாறு மறைக்கின்றதோ அவ்வாறே இறைவனது அருளைப் பெற முடியாவாறு, "நான்" "எனது" என்ற அறியாமை தடுக்கிறது. ஆனால் ஒழுக்கத்தினாலும், சாதனையினாலும் அதனை வென்று விடலாம். ஆதலின், அறிந்ததையும், பின்பற்றுவதையும் விளக்கமாக உள்ளத்திலே பதிய வைத்துக்கொண்டால், அது மிகவும் எளிதாகிவிடும். இது நான் கண்ட உண்மை. மற்றவர்களும்; அவ்வாறே எண்ணுவர் என்று நினைக்கிறேன்.

**சுவாமி :** உண்மை, உண்மை! நீ கூறியன யாவும் உண்மையே. நீ நன்றாக அறிந்திருக்கிறாய். உண்மைப் பொருளை உணரா முன்னர், பல்வேறு வகையான விளக்கங்களைக் கூறினால், அவை உண்மையையே மாற்றி அமைத்துவிடும். தவறாக உணர்ந்து கொண்டாலும் உண்மையை அறிய முடியாது. விளக்கமாக அறிந்து கொண்டால், செய்யும் சாதனை எளிமையாகி விடும். இப்பொழுது எண்ணிப்பார்! யாவரும் ஒரே காலத்தில் பிறக்கின்றனரா? அல்லது யாவரும் ஒரே காலத்தில் இறக்கின்றனரா? அவ்வாறே உயர்ஞானம் ஒருவனிடத்தில் பல்வேறு காலங்களில் தோன்றுகிறது. இசை பயில வேண்டுமாயின், பலவகைப் பண் களையும் பாடிக்கொண்டே இருக்கவேண்டும். அங்ஙனமே,

நான் இதைப் பற்றிப் பல்வேறு கோணங்களிலிருந்தும் விளக்கிக் கொண்டேயிருந்தால்தான், கேட்போர் அந்த மெய்ஞ்ஞானத்தை அறிய இயலும். நான் இவ்வுலகத்தில் அவதரித்தது, மக்களை அறியாமையில் ஆழ்த்துவதற்காக அல்ல; விளங்க வைப்பதற்குத் தான். எனவே, ஒரு முறையல்ல இரண்டு முறையல்ல. அவ் உண்மைப் பொருளை விளக்கிக் கொள்ள எத்தனைமுறை தேவைப்பட்டாலும், அத்தனை முறையும் கூறி விளக்கவேண்டி இருக்கிறது.

**பக்தன் :** சுவாமி ! நாங்கள் எஃகுத் துண்டு போன்றவர்கள். தாங்கள்தான் தூக்காந்தம் போன்றவர். இருவரிடையேயும் பற்று உள்ளது. இறைவனது கரத்திலே அந்த எஃகுத் துண்டு பயன்படும் பொருளாக ஆகவேண்டுமாயின், ஆவல் என்ற தீயில் நின்று துன்பம் என்னும் சுத்தியலினால் அடியுண்டு வளைந்து கொடுக்கும் தன்மையைப் பெற வேண்டும். அந்த எஃகுத் துண்டைப் போன்று நாங்களும் பயன்படும் பொருளாக ஆக வேண்டுமாயின், பலவிதத் துன்பங்களுக்கும் ஆளாக வேண்டும். தங்களது அவதாரமே இந்நோக்கத்தினை நிறைவேற்றலே என்றும் கூறினீர்கள். இதற் கென்று தாங்கள் எடுத்துக்கொள்ளும் சிரமத்திற்கு அளவு கிடையாது. இப்பொழுது தாங்கள், சென்ற திங்களில் “சித்து” என்பது பற்றிக் கூறுவதாகக் குறிப்பிட்டீர்களே, அதனைத் தயைகூர்ந்து தெளிவாக்குங்கள் சுவாமி.

**சுவாமி :** ஆம், சொல்லுகிறேன். சித்துவிற்குச் சுத்த சத்துவம் (சுத்த சைதனியம்) என்றோர் பெயருமுண்டு. வித்யை எவ்வாறு அவித்யைக்கு மாறானதோ, அவ்வாறே அது அசுத்த சை-தன்னியத்திற்கு மாறானது. ஒளியினின்றும் இருளை எவ்வாறு பிரிக்க முடியாமல் இணைந்து கிடக்கின்றதோ, அவ்வாறே அசுத்த சைதன்னியமும், சுத்தத்திலிருந்து வேறு பிரிக்க முடியா வண்ணம் அமைந்து விடுகிறது. பல பெயர்களை நான் கூறினேன். குழப்பம் அடையாதே. வித்யை, அவித்யை, ஞானம், அஞ்ஞானம், சுத்த சத்துவம், மலின சத்துவம் என்று இவ்வாறு கூறப்படுவன எல்லாம் வெவ்வேறு பொருளுடைய சொற்களல்ல. அவை எல்லாம்

ஒரு பொருளையே குறிக்கும் பல சொற்களாகும். மற்றொரு கேள்வி: "பிரக்கிருதி"க்கு எதிர்ப்பதம் என்ன என்பது பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறாயா ?

**பக்தன்** ஆம் சுவாமி. இலக்கணம் கற்கும்பொழுது "பிரக்கிருதி"க்கு எதிர்ப்பதம் "விக்கிருதி" என்று அறிந்தேன்.

**சுவாமி :** விக்கிருதி என்றால் பொருளென்ன?

**பக்தன் :** விக்கிருதிக்குப் பொருள் விகாரம், மாற்றம், வருவித்தல், வேறொன்றாக்குதல் போன்றவையாகும். "அக்கினி" என்பது மூலச்சொல். "அக்கி" அச்சொல்லிலிருந்து பெறப்பட்டது. அதுபோன்று "யமா"விலிருந்து "ஜமா"வும், "யக்ஜா" விலிருந்து "ஜன்னா"வும் வருவிக்கப்பட்டன. மேலும் பல.

**சுவாமி :** அவ்வாறே இறைவனது பிரக்கிருதியை மாயை என்கிறோம். அதிலிருந்து தோன்றியவற்றை அல்லது அதனது அடுத்த கீழ் உருவத்தை, அல்லது விக்கிருதியை "அவித்யை" என்றும் கூறுகிறோம். வித்யை அல்லது சுத்த சத்துவத்திற்கு அடுத்து கீழாகக் கூறப்படுவது அவித்யை அல்லது மலின சத்துவம்.

**பக்தன் :** அது எவ்வாறு சுவாமி? வித்யை இறைவனிடத்திலே பிரகாசிக்கின்றது. அந்த அவித்யை தோன்றுவதற்கு ஆதாரமே அவித்யை அன்றோ? அதனாலன்றோ கூறுகின்றனர், இவ்வுலகில் காணப்படுகின்ற எல்லாப் பொருளும் ஒரேதன்மை வாய்ந்தவையாக இறைவனுக்குக் காணப்பட,மற்றவர்களுக்கு அவை எல்லாம் உருவத்தினாலும், பெயரினாலும் மாற்றம் அடைவதே போன்று, இது மரம், இது கொடி, இவன் உயர்ந்தவன், அவன் தாழ்ந்தவன் என்றெல்லாம் வெளித்தோற்றத்தில் காணப்படுகிறது. இந்த அறியாமையின் சக்தியான அவித்யா சக்தியும் பிரிக்க முடியாத பொருளாகத் தோன்றுகிறது. எனவே, கடவுள் ஒருவர் தான் இருப்பிடமாக உள்ளவர் (நிலையானவர்). ஆதலினால் இவ்வுலகில் காணப்படுகின்ற தனித்தனிப் பொருளாயினும் அல்லது பல ஒன்று கூடிய கூட்டமாயினும்

அவற்றிற்கு ஆதாரமாக, இருப்பிடமாக உள்ளது அந்த இருப்பிடம்தான். இதுவன்றோ தாங்கள் கொள்ளும் கருத்து?

**சுவாமி :** எனவேதான் இறைவனைச் சத்யம் என்றும் பிரஹ்மம் என்றும் கூறுகிறோம். "சத்யம்" அகண்டமான அல்லது பார்வையுள் அடங்காத பரப்பினை உடையதாக உள்ளது. அத்வைதம் என்றும், ஏகம் என்றும் அதைத் தான் குறிக்கிறோம். அது முடிவற்ற ஆனந்தத்தை உடையது. தோற்றமிலா மாயா சக்தியுடன் இணைந்துள்ள இந்தச் சத்யத்தைப் "பூரணம்-அடாஹ்" என்றும், தோற்றமுடைய மாயா சக்தியுடன் இணைந்துள்ள சத்யத்தை "பூரண இடம்" என்றும் உபநிஷத்தில் கூறப்பட்டுள்ளது. இதுதான் உபநிஷத் மந்திரத்தின் இரகசியம்! "பூர்ண மதா பூர்ணமிடம்.........

**பக்தன் :** ஆ ! என்ன அருமையான போதனை. உண் என்று ஒரு பழத்தைக் கையிலே கொடுப்பதன்றி, உண்பதற்கு ஏற்றவாறு உரித்தும் கொடுப்பதைப் போன்றல்லவோ இருக்கிறது தங்கள் விளக்கம். இந்தத் தோற்றுவிக்கப்பட்ட முழுப் பிரபஞ்சம் அல்லது பூரணம், தோற்றுவிக்கப்படாத, பிரிக்க முடியாத மெய்மையின் பூரணத்திலிருந்து எழுந்தது என்பதன்றோ தாங்கள் கூறுவது !

**சுவாமி :** அக் காரணத்தை முன்னிட்டுத்தான் "வாசுதேவன் சர்வம் இடம்" (எல்லாம் வாசுதேவனின் இடம்) "சர்வம் கல்விதம் பிரஹ்மா" (பிரமம் எங்கும் தங்கியுளது) என்றெல்லாம் கூறுகிறோம். வாசுதேவன், பிரஹ்மம்- இவை சொற்களில் மட்டுமே வேற்றுமையுடையன; பொருளில் அன்று. இப்போது விளங்குகிறதா?

**பக்தன் :** சுவாமி ! இது அமிர்தம் போன்றல்லவோ இருக்கிறது! ஆனால் தாங்கள், "நான் யார்" என்பதைப் பற்றி ஒன்றும் கூறவில்லையே?

**சுவாமி :** இன்று இதுவரை போதும். அடுத்த திங்களில் உன்னுடைய ஐயங்களை எல்லாம் பொருத்தமான உதாரணங் களைக்கொண்டு போக்குவேன். விளக்கியவரை உள்ளத்தில் நன்கு பதியவைத்துக் கொள். யாவற்றையும் சாதனையில்

கொண்டு வா. சோம்பி, மறந்து பிறகு பார்க்கலாம் என்றிராதே! எண்ணமெல்லாம் அதனைப் பற்றிக்கொண்டிருக்கட்டும். இனி நீ போகலாம். மங்கலம் பெறுக !